செ.வெ.எண் : 07/ ஜூலை நாள் : 04.07.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## மின்னணு குடும்ப அட்டை தொடர்பான குறைதீர் கூட்டம் வருகின்ற 08.07.2017 அன்று நடைபெறவுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மின்னணு குடும்ப அட்டைகளில் பிழைத்திருத்தம், பெயர் சேர்த்தல், பெயர் திருத்தம், பெயர் நீக்கல், முகவரி மாற்றம் போன்றவை தொடர்பாக பொதுமக்கள் தங்களின் குறைகளை மனுக்களாக அளித்து பயன்பெறும் வகையில் குறைதீர் கூட்டம் வருகின்ற 08.07.2017 அன்று நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமை மாவட்டத்தின் அனைத்து வட்டங்களிலும் ஒரு கிராமத்தில் சுழற்சி முறையில் பொதுவிநியோகத்திட்ட குறைதீர் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக ஜீலை 2017 மாதத்தில் கீழ்க்காணும் கிராமங்களில் நடத்தப்பட உள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம் மண்டபம், இராமேஸ்வரம் வட்டம் பாம்பன், திருவாடானை வட்டம் ஏ. மணக்குடி, பரமக்குடி வட்டம் மேலாய்குடி, முதுகுளத்தூர் வட்டம் கொளுந்துரை, கடலாடி வட்டம் வாலிநோக்கம், கமுதி வட்டம் ஆணையூர், கீழக்கரை வட்டம் திருப்புல்லாணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பொதுவிநியோகத் திட்டம் சம்பந்தமான தங்களின் குறைகள் மற்றும் மின்னணு குடும்ப அட்டைகளில் பிழைத்திருத்தம் புகைப்படம் பதிவேற்றம் போன்ற குறைகள் ஆகியவற்றை நிவர்த்தி செய்ய குறைதீர் கூட்டம் வரும் 08.07.2017 (சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது. இக்குறைதீர் முகாமில் பொதுமக்கள் மின்னணு குடும்ப அட்டைகளில் பிழைத்திருத்தம், பெயர் சேர்த்தல், பெயர் திருத்தம், பெயர் நீக்கல், முகவரி மாற்றம் போன்ற தொடர்புடைய மனுக்களை அளித்து பயன்பெறலாம்

பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**